**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

கட்டட அனுமதி - புராதன நகரங்களில் கட்டட அனுமதி வழங்குதல் - அரசு ஆணைகள் ரத்து செய்தல் மற்றும் உயரக் கட்டுப்பாடு விதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1)துறை**

அரசாணை (நிலை) எண் 22 நாள் 30.1.97

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 163 நநிமகுவ துறை நாள் 6.7.93
2. அரசாணை (நிலை) எண் 191. நநிமகுவ துறை நாள் 18.7.94
3. அரசாணை (நிலை) எண் 233. நநிமகுவ துறை

   நாள் 27.11..95
4. அரசாணை (நிலை) எண் 234. நநிமகுவ துறை

   நாள் 27.11.95

ஆணை

ஸ்ரீரங்கம் நகரத்தில், ஸ்ரீரங்கம் கோயில் சுற்றுச் சுவரிலிருந்து 1 கி. மீட்டர் சுற்றளவுக்குள் கட்டப்படும் கட்டிடங்கள், தரை மற்றும் முதல் தளம் சேர்த்து உயரம் 9 மீட்டருக்குள் இருக்க வேண்டுமென்றும், இந்த வரையறைக்குட்படாத அதாவது 1 கி.மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள கட்டிடங்கள் உட்பட அனைத்து கட்டிடங்களுக்கான விண்ணப்பங்களும் அரசுக்கு பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் அரசாணை நிலை எண் 233 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.11.95ல் உத்தரவிடப்பட்டது,. 27.11.95 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அரசாணை

எண் 234ல் ஸ்ரீரங்கம் நகரத்தைப் போலவே மற்ற இணைப்பில் கண்ட புராதன நகரங்களில் கட்டப்படும் கட்டிடங்களை முறைப்படுத்துவதை கருத்தில் கொண்டு. மற்ற புராதன நகரங்களுக்கும் அவைகளது தனித்தன்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு விதிமுறைகளை முடிவு செய்து அரசுக்கு பரிசீலனைக்கு அனுப்புமாறும், மேற்கண்ட முறைகளை முடிவு செய்யும் வரை எல்லா புராதன நகரங்களுக்கும் கட்டிட அனுமதி கோரும் செயற்குறிப்பினை அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறும் நகர் ஊரமைப்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மேற்படி ஆணைகளின்படி. புராதன நகரங்களில் கட்டக்கூடிய கட்டடங்களுக்கான அனுமதியை அரசிடம் பெறவேண்டும் என்பதில் நடைமுறையில் ஏற்படுகிற பல சிக்கல்களையும் காலதாமதங்களையும் பொதுமக்களுக்கு ஏற்படுகிற பிரச்சனைகளையும் தவிரிக்கும் பொருட்டு மேற்படி அரசாணைகளை ரத்து செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்தது.

பரிசீலனைக்குப்பின் மேலே பத்தி 1ல் கூறப்பட்டுள்ள அரசாணைகளை அரசு ரத்து செய்கிறது. மேலே இணைப்பில் கண்டுள்ள 38 புராதன நகரங்களிலும், புராதன கோயிலின் சுற்றுச் சுவரிலிருந்து 1 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் கட்டப்படும் கட்டடங்கள் (தரைதளம் மற்றும் முதல் தளம்) 9 மீட்டர் உயரத்திற்கு மிகாமல் கட்டப்பட வேண்டும் எனவும் இந்தக் கட்டுப்பாட்டில் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் கட்டடங்களுக்கான அனுமதியை வழங்கலாம் எனவும் அரசு ஆணை பிறப்பிக்கிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.

அரசு செயலாளர்

பெறுநர்

நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை 2
நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை 5
மாநகராட்சிகளின் தலைமை இயக்குநர் சென்னை 3
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
பேரூராட்சி இயக்குநர் சென்னை 108
ஊரக வளர்ச்சி இயக்குநர் சென்னை 15
நகல் முதலமைச்சர் அலுவலகம் சென்னை 9
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அலுவலகம் சென்னை 9
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சென்னை 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (பொது) /நநி1 உதவி பிரிவு அலுவலர் 1) துறை சென்னை 9
ஊரக வளர்ச்சித் துறை சென்னை 9

திரு. கே. ஞானபிரகாசம் மாநில அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர் உயர்நீதிமன்றம் சென்னை 108

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

இணைப்பு

அரசாணை நிலை எண் 22 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.1.97

1, காஞ்சிபுரம்
2. சிதம்பரம்
3. ராமேஸ்வரம்
4. ஸ்ரீரங்கம்
5, திருவில்லிபுத்தூர்
6 மாமல்லபுரம்
7 தஞ்சாவூர்
8 கும்பகோணம்
9 கங்கைகொண்டசோழபுரம்
10 பூம்புகார்
11 மதுரை
12 பழனி
13 திருச்செந்தூர்
14 திருத்தணி
15 கன்னியாகுமரி
16 திருவண்ணாமலை
17 செஞ்சி
18 செட்டிநாடு
19 வாலிநோக்கம்
20தரங்கம்பாடி
21 நாகூர்
22வேளாங்கண்ணி
23குற்றாலம
24ஸ்ரீபெரும்புதுார்
25திருநெல்வேலி
26திருச்செங்கோடு
27 காரைக்குடி
28பேரூர்
29பவானி
30பிச்சாவரம்
31 மருதுார்
32குறிஞ்சிப்பாடி

33 திருமயம்
34 சித்தன்னவாசல்
35 ஆவுடையார் கோயில்
36 பத்மநாபபுரம்
37 குளச்சல்
38 மரக்காணம்

எஸ். மாலதி.

அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்